நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**லாபம் கொழிக்கும் தொழிலாக உருவெடுத்துள்ள மண்புழு சேகரிப்பு!**

First Published : 13 Mar 2011 04:26:44 AM IST



இறால்களுக்கு உணவாகும் மண்புழுக்களை, கடலூர் அருகே உள்ள உப்பனாற்றில் சேகரிக்கும் தொழிலாளி.

கடலூர், மார்ச் 12: இறால் பண்ணைகளுக்கு பெருமளவுக்கு வாங்கப்படும் கடற்கரை மண்புழு சேகரிக்கும் தொழில், கடலூர் மாவட்ட உப்பனாற்றங்கரைகளில் லாபம் தரும் தொழிலாக உருவெடுத்து வருகிறது.

விவசாயத்தில் மண்புழு வளர்ப்பு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இயற்கை வேளாண்மையில் மண்புழு உரம் தயாரிக்கும் தொழில் பெருமளவில் லாபம் தரும் தொழிலாக வளர்ந்து உள்ளது. இதனால் நகர்ப்புறங்களில் அகற்றப்படும் மக்கும் குப்பைகளில் இருந்தும், மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் கடலூர் மாவட்டக் கடலோரப் பகுதிகளில் காணப்படும் ஒருவகை மண்புழு, இறால் பண்ணை வைத்திருப்போரால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. எனவே இறால் மண்புழு சேகரிக்கும் தொழில், கடலூர் மாவட்ட கடலோரப் பகுதிகளில் தற்போது வளர்ந்து வருகிறது.

குறிப்பாக உப்பனாற்றங்கரைகளில் உள்ள ஒருவகை வண்டல்மண் குவியல்களில், இந்த வகை மண்புழு அதிகம் காணப்படுகிறது. இறால் குஞ்சு பொறிக்கும் பண்ணைகளில், குஞ்சு பொறித்த உடன் முதல் உணவாக இந்த மண்புழு வழங்கப் படுகிறது.

எனவே இறால் குஞ்சு வளர்க்கும் பண்ணைகளில் இந்த மண் புழு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. செயற்கை உணவைவிட இந்த இயற்கை உணவால் இறால் குஞ்சுகள் வேகமாக வளர்வதாக, அண்மையில் இறால் பண்ணை வளர்ப்போர் கண்டுபிடித்துள்ளனர்.

கடலூர் மாவட்டம் செல்லங்குப்பம், கிள்ளை, பிச்சாவரம் கடற்கரையில் உள்ள உப்பனாற்றுப் பகுதிகளில் பலர், குடும்பம் குடும்பமாக இந்த மண்புழு சேகரிக்கும் தொழிலில் ஈடுபடுகிறார்கள். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இத் தொழிலில் ஈடுபட்டால் நாளொன்றுக்கு ஒருநபருக்கு, குறைந்த பட்சம் ஒரு கிலோ மண் புழுக்களை சேகரிக்கமுடியும் என்கிறார்கள்.
ஒரு கிலோ மண்புழு விலை குறைந்தபட்சம் ரூ. 300. சிலர் 2 கிலோ வரைகூட மண்புழுக்களை சேகரிக்கிறார்கள். இறால் மண்புழுக்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதாக, இத்தொழிலில் ஈடுபடுகிறவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மேலும் கடலில் அதிகம் காணப்படும் கிழங்கா மடவை உள்ளிட்ட மீன்கள், நீரோட்டம் காரணமாக உப்பங்கழிப் பகுதிகளுக்கு அதிகம் வருகின்றன. இந்த மீன்களை தூண்டில் போட்டு பிடிக்கும் மீனவர்களும், இந்த மண்புழுக்களை அதிமாக வாங்குகிறார்கள்.
இறால் மண்புழு சேகரிக்கும் தொழிலில் பெரும்பாலும் இருளர் சமூகத்தினர் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு, நல்ல வருவாய் ஈட்டும் தொழிலாக இறால் மண்புழு சேகரிக்கும் தொழில் மாறி இருக்கிறது.

**விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் ஆய்வு**

First Published : 13 Mar 2011 12:30:15 PM IST

கரூர், மார்ச் 12: கரூர் விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் விதைச் சான்றுத் துறை இணை இயக்குநர் ஆ. கோபால் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார்.

கரூர் காந்திகிராமத்தில் செயல்பட்டுவரும் இந்த விதைப் பரிசோதனை நிலைத்தில் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறைகள், பதிவேடு ஆகியவற்றை அவர் ஆய்வு செய்தார்.

அப்போது, பணி விதை மாதிரிகளை விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் இந்த ஆய்வகத்தில் ஆய்வு செய்து பயன்பெற வேண்டும்.

மேலும், ஆய்வகத்திற்கு வரப்பெற்றுள்ள பணி விதை மாதிரிகளைத் மிகத் துல்லியமாக ஆய்வு செய்து, அதன் முடிவுகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன என்றார் அவர்.

கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் ப. ரெங்கராஜ், கரூர் விதைச் சான்று உதவி இயக்குநர் ரா. கைலாசபதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பருத்தி விவசாயிகளுடன் கலந்துரையாடல்**

First Published : 13 Mar 2011 12:31:33 PM IST

பெரம்பலூர், மார்ச் 12: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள நெற்குணம் கிராமத்தில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியம் மையம் மற்றும் கோயம்புத்தூர் இந்திய பருத்திக் கழகம் சார்பில், ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, இந்திய பருத்திக் கழகப் பொது மேலாளர் பி.டி. பிள்ளைவார் தலைமை வகித்தார்.

வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் ஆர். கவிமணி, இந்திய பருத்திக் கழக உதவி மேலாளர் பி. சிவக்குமார், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு வல்லுநர் சி. சங்கர், பருத்தி ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் டி. ஆனந்த் உள்ளிட்டோர், ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் திட்டத்தின் கீழ், ஏற்பட்ட நன்மை, தீமைகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்து, அவர்களது சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

முன்னதாக, பருத்தி சாகுபடி குறித்த தொழில்நுட்பக் கையேட்டை இந்திய பருத்திக் கழகப் பொது மேலாளர் பி.டி. பிள்ளைவார் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில், திட்ட மேற்பார்வையாளர் ஆர். செந்தில்குமார், வேளாண் அறிவியல் மைய பருத்தி முதல் நிலை ஆய்வாளர் பி. சரவணன், திட்ட களப் பணியாளர் ஏ.ஆர். செல்வராஜ் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர், மார்ச் 12: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள நெற்குணம் கிராமத்தில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியம் மையம் மற்றும் கோயம்புத்தூர் இந்திய பருத்திக் கழகம் சார்பில், ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, இந்திய பருத்திக் கழகப் பொது மேலாளர் பி.டி. பிள்ளைவார் தலைமை வகித்தார்.

வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய தலைவர் ஆர். கவிமணி, இந்திய பருத்திக் கழக உதவி மேலாளர் பி. சிவக்குமார், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு வல்லுநர் சி. சங்கர், பருத்தி ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் டி. ஆனந்த் உள்ளிட்டோர், ஒரு

கிராமத்தில் ஒரு பருத்தி ரகம் திட்டத்தின் கீழ், ஏற்பட்ட நன்மை, தீமைகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்து, அவர்களது சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

முன்னதாக, பருத்தி சாகுபடி குறித்த தொழில்நுட்பக் கையேட்டை இந்திய பருத்திக் கழகப் பொது மேலாளர் பி.டி. பிள்ளைவார் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில், திட்ட மேற்பார்வையாளர் ஆர். செந்தில்குமார், வேளாண் அறிவியல் மைய பருத்தி முதல் நிலை ஆய்வாளர் பி. சரவணன், திட்ட களப் பணியாளர் ஏ.ஆர். செல்வராஜ் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சேலம் மாவட்டத்தில் எலுமிச்சை பழம் தட்டுப்பாடு!**

First Published : 13 Mar 2011 11:49:15 AM IST

தம்மம்பட்டி, மார்ச் 12: தம்மம்பட்டியில் எலுமிச்சை பழம் வரத்து வெகுவாக குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்துள்ளது.

தம்மம்பட்டி கடைகளுக்கு பெரம்பலூர் மாவட்டம், அம்மம்பாளையம் பகுதியில் இருந்து எலுமிச்சம் பழங்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். இந்நிலையில், அம்மம்பாளையத்தில் நிலவும் கடும் வெயிலால் எலுமிச்சை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது.

இதனால் தம்மம்பட்டிக்கு எலுமிச்சை வரத்து நின்று விட்டது. ஒரு சில கடைகளில் கிடைக்கும் எலுமிச்சை பழம் ஒன்று ஐந்து ரூபாய்க்கும், ஆறு ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

**பச்சை மிளகாய் கொள்முதல் விலை சரிவு**

First Published : 13 Mar 2011 11:18:46 AM IST

பல்லடம், மார்ச் 12: பச்சை மிளகாய் விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிவடைந்துள்ளது.

பல்லடம் பகுதியில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பாலிஸ்டர், தேனி சம்பா, உருண்டை ஹைபிரட் ரக பச்சை மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாற்றங்காலிட்டு சாகுபடி செய்யப்படும் ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் சாகுபடி செலவு ஆகிறது.

பச்சை மிளகாய் 70 நாளில் காய்ப்புக்கு வருகிறது. பின்னர் தொடர்ந்து 6 மாதத்துக்கு பலன் கொடுக்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை மிளகாய் செடியிலிருந்து பறிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் 2 ஆயிரம் கிலோ மகசூல் கிடைக்கிறது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூ.14க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ஒட்டன்சத்திரம்,

செம்பட்டி பகுதி மிளகாய் அதிக வரத்தால் தற்போது கிலோ ரூ.10க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

குறைந்தபட்சம் கிலோ ரூ.15க்கு கொள்முதல் செய்தால் தான் விலை கட்டுபடியாகும். இல்லை என்றால் பறிப்பு கூலி, போக்குவரத்து செலவு போன்றவையால் நஷ்டம் தான் ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**மூலிகை பூங்கா அமைக்க வலியுறுத்தல்**

First Published : 13 Mar 2011 02:12:34 PM IST

நாகர்கோவில், மார்ச் 12: மருந்துவாழ்மலையில் மூலிகைப் பூங்கா அமைக்க வேண்டும் என்று நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு சங்கத் தலைவர் எஸ்.ஆர். ஸ்ரீராம் அனுப்பியுள்ள மனு: கன்னியாகுமரி அருகே மருந்துவாழ்மலையையொட்டி அரசு புறம்போக்கு இடத்தில் குவாரியொன்று எவ்வித உபயோகமின்றி உள்ளது. இந்த குவாரியை நிரப்பி மிகப்பெரிய பூங்கா அமைக்க வேண்டும். மருந்துவாழ் மலையானது மூலிகைகள் நிறைந்த இடம் என்பதால் இங்கு மூலிகைப் பூங்கா அமைக்கலாம். இதற்கான நிதி ஒதுக்கீடு செய்து பூங்காவை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**சாப்பிட தகுதியற்ற 26 டன் ஆப்பிள் பழங்கள் அழிப்பு**

First Published : 13 Mar 2011 02:48:11 PM IST

பொன்னேரி, மார்ச் 12: பொன்னேரி அருகே சாப்பிட தகுதியில்லாத நிலையில் தனியார் கன்டெய்னர் கிடங்கில் இருந்த 26 டன் எடைகொண்ட ஆப்பிள் பழம் பள்ளம் தோண்டி புதைக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

÷கப்பல் மூலம் வெளிநாடுகளில் இருந்து வரும் பொருள்கள் பொன்னேரி அருகே புலிக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கன்டெய்னர் கிடங்குக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் பல்வேறு மாநிலங்களுக்கு கன்டெய்னர் லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படும்.

÷இந்நிலையில் வெளிநாட்டில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு பலமாதங்களாக 3 கன்டெய்னர் லாரிகளில் இங்கு வைக்கப்பட்டிருந்த இருந்த 26 டன் எடை கொண்ட ஆப்பிள்கள்

பொதுமக்கள் சாப்பிட தகுதியற்ற நிலையில் உள்ளதாகக் கூறி வருவாய் புலனாய்வு அதிகாரிகள் அதனை அழிக்கும்படி உத்தரவிட்டுள்ளனர்.

÷இதை அடுத்து தனியார் கன்டெய்னர் வளாகத்திலேயே 30 அடி ஆழத்தில் குழிதோண்டப்பட்டு அதில் சாப்பிட தகுதியற்ற இருந்த ஆப்பிள் பழங்கள் சனிக்கிழமை அழிக்கப்பட்டன.

÷பள்ளத்தில் கொட்டி அழிக்கப்பட்ட ரசாயன பவுடர் தடவிய வெளிநாட்டு ஆப்பிள் பல லட்ச ரூபாய் மதிப்புமிக்கதாகும்.

தினமலர்

**காலாவதியான 26 டன் ஆப்பிள்கள் புதைப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,01:50 IST

பொன்னேரி : பொன்னேரி அருகே கன்டெய்னர் கிடங்கில் பல மாதங்களாக பாதுகாத்து வைக்கப்பட்ட 26 டன் ஆப்பிள்கள் நச்சுத்தன்மைக்கு மாறியது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. "பளபள'வென காணப்பட்டாலும், பயன்படுத்த லாயக்கற்றவை என்பதால், அவற்றை அதிகாரிகள் குழிதோண்டி புதைத்தனர்.திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே மணப்பம்பட்டு பகுதியில், தனியார் கன்டெய்னர் கிடங்கு செயல்பட்டு வருகிறது.

இங்கு வெளிநாட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பொருட்கள் கொண்டு வரப்பட்டு பாதுகாத்து வைக்கப்படுவது வழக்கம்.கடந்த 6 மாதங்களுக்கு முன், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 26 டன் ஆப்பிள் பழங்கள், 40 அடி நீளம் கொண்ட மூன்று குளிர்சாதன கன்டெய்னர்கள் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த 7ம் தேதி சுங்க இலாகா அதிகாரிகள், கிடங்கில் உள்ள பொருட்களை சோதனை செய்தனர். அப்போது, இங்கிருந்த 26 டன் வெளிநாட்டு ஆப்பிள்கள், அவற்றின் இயல்பிலிருந்து நச்சுத்தன்மைக்கு மாறியிருப்பது தெரிந்தது.இதையடுத்து, அதிகாரிகளின் உத்தரவின் பேரில், அட்டைப்பெட்டிகளில் இருந்த 26 டன் ஆப்பிள் பழங்கள், அதே பகுதியில் பெரியளவிலான பள்ளங்கள் தோண்டி புதைக்கப்பட்டது. பார்ப்பதற்கு, காலாவதியான சுவடே தெரியாமல் பளபளப்பாக இருந்தன.

**திருக்கோவிலூர் ஏரியில் மீன் விற்பனை "படுஜோர்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,01:40 IST

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் பெரிய ஏரியில் உயிருடன் பிடிக்கப்படும் மீன்களை வாங்க அசைவப் பிரியர்களிடையே போட்டா போட்டி நிலவுகிறது. கடல் மீன்கள் பிடிக்கப்பட்டு இரண்டு நாட்களுக்கு பின்னரே ஐஸ் வைத்து விற்பனைக்கு வருகிறது. இதனை வாங்கி சாப்பிட்டு சலித்துப் போன அசைவ பிரியர்களுக்கு துள்ளிக் குதிக்கும் உயிர் மீன்களை சமைத்து சாப்பிடுவதில் எப்பவுமே அலாதி பிரியம்தான். திருக்கோவிலூர் பெரிய ஏரியில் தண்ணீர் நிறைய இருந்தாலும் மீன்கள் வளர்ந்த நிலையில் இருப்பதால் போட் மூலம் பிடிக்கப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் போட்டில் இருந்து கரைக்கு கொண்டு வரப்படும் உயிர் மீன்களை வாங்குவதற்கு போட்டா போட்டி நிலவியது. கட்லா, சிசி, மிருகால், ரோகு, பொட்லா என விதவிதமான மீன்களை வாங்க மீன் பிரியர்கள் டோக்கன் வாங்கிக் கொண்டு மணிக்கணக்கில் காத்துக் கிடந்தனர். "போட்' எப்போது கரைக்கு வரும் என காத்திருந்து ஒரு கிலோ முதல் இரண்டு கிலோ சைஸ் வரை வளர்ந்த மீன்களை கிலோ 50 ரூபாய் என விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,00:17 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கிருஷ்ணா கல்வியியல் கல்லூரியில் கிருஷ்ணகிரி மலைக்கோட்டை ஜேசிஸ் சார்பில் மரக்கன்று நடும் விழா மற்றும் இளைய ஜேசிஸ் பாசறை துவக்க விழா நடந்தது. ஜேசிஸ் தலைவர் இர்பான் தலைமை வகித்தார். தேசிய துணை தலைவர் சிரிஸ் டின்டோ, மண்டல தலைவர் அல்பேஷ் பாட்டிரீயா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் கணேசன் வரவேற்றார். கல்லூரி தாளாளர் பெருமாள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். தேசிய துணை தலைவர் இளைய ஜேசீஸ் பாசறையை தொடங்கி வைத்து அறிமுகப்படுத்தி வைத்தார். இதனையடுத்து கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. ஜேசிஸ் மண்டல துணை தலைவர்கள் சண்முகம், நீதிமோகன், சம்பத், ஏஞ்சலம், முன்னாள்

ஜேசீஸ் தலைவர் ரவிச்சந்திரன், உறுப்பினர்கள் சந்துரு, ரவீந்தர், ஜமீரு, செந்தில்குமார், முனியப்பன் ஆகியோர் உட்நட பலர் கலந்து கொண்டனர். கோபாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

8,000 வாழைத்தார் ரூ.6 லட்சத்துக்கு ஏலம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,01:59 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் 8,000 வாழைத்தார்கள் ஆறு லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.கதளி கிலோ 22.30 ரூபாய், நேந்திரன் 17, செவ்வாழை தார் 440, ரோபஸ்டோ 275, தேன் வாழை 325, பூவன் 250, மொந்தன் 250, பச்சைநாடா 215, ரஸ்தாளி 275 ரூபாய்க்கு ஏலம் போனது. தேங்காய் 15 ஆயிரம் காய்கள் விற்பனைக்கு வந்தன. அதிகபட்சமாக தேங்காய் ஒன்று 11.30 ரூபாய், குறைந்தபட்சமாக ஐந்து ரூபாய், சராசரியாக 7.50 ரூபாய்க்கு ஏலம் போனது.

பசுமைக்குடில் திட்டத்தில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,01:24 IST

ஆனைமலை : பசுமைக்குடில் திட்டத்தில் காய்கறி, மலர் சாகுபடி செய்தால் அதிக லாபம் கிடைப்பதாலும், அரசு மானியம் வழங்குவதால் பசுமைக்குடில் அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டுமென்று தோட்டக்கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது.பசுமைக்குடில் திட்டம் பாதுகாக்கப்பட்ட சாகுபடி தொழில்நுட்ப முறையாகும். இந்த முறையில் காய்கறிகளான தக்காளி, வெள்ளரி, கொடை மிளகாய் ஆகியவையும், மலர் வகைகளான ரோஜா, ஜெர்பெரா ஆகியவையும் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பசுமைக்குடில் மூலம் சாகுபடி செய்யும்போது 50 சதவீதம் அதிகமாக மகசூல் கிடைக்கிறது.இத்திட்டம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது.மகாராஷ்டிரா மாநிலம் பூனேவில் பசுமைக்குடில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்(என்.ஹெச்.எம்) மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. பசுமைக்குடில் 1,000 சதுர மீட்டர் இடத்தில் (25 சென்ட்) அமைக்க அரசின் திட்ட மதிப்பீடு 6.5 லட்சம் ரூபாயாகும். இதில், அரசால் 50 சதவீதம் மானியம் கொடுக்கப்படுகிறது.மீதமுள்ள தொகை மட்டுமே விவசாயி முதலீடு செய்யவேண்டியுள்ளது. அந்த தொகையை வங்கிகளின் மூலம் கடன் பெற்றும் பயன்பெறலாம்.கோவை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தங்கராஜ் கூறியாதவது:தோட்டக்கலைத்துறை மூலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டங்களில் குறிப்பாக

பசுமைக்குடில் திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. கோவை, நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் நல்ல முறையில் செயல்பாட்டில் உள்ளது.கோவை மாவட்டத்தில் பசுமைக்குடில் திட்டம் ஆனைமலை, பொள்ளாச்சி,தொண்டாமுத்தூர், காரமடை, அன்னூர், மதுக்கரை, சர்க்கார்சாமகுளம், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் கோவை மாவட்டத்தில் 10 விவசாயிகள் மட்டுமே இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகங்களில் விவசாயிகள் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.பசுமைக்குடில் திட்டத்தல் 50 சதவீத மானியத்துடன் குடில் அமைக்க குறைந்த இடமே தேவைப்படுவதால் விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் தொழில்நுட்ப ஆலோசனை பெற்று பயன்பெறலாம் என்றார்.ஆனைமலை வட்டாரத்தில் உள்ள பசுமைக்குடில்களை ஆனைமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்(பொறுப்பு) மோகன், பொள்ளாச்சி தோட்டகலைத்துறை உதவி இயக்குநர் விவேகானந்தன் மற்றும் பொள்ளாச்சி தோட்டக்கலைத்துறை அலுவலர் சகாப்தீன் ஆகியோர் பார்வையிட்டனர்.

**இயற்கை விவசாயம் விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,00:14 IST

குளித்தலை: குளித்தலை அருகே தண்ணீர்பள்ளி கல்வி அறக்கட்டளை பயிற்சி மையத்தில் திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி சமூக பணித்துறை மாணவிகள் சார்பில் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. பெண்கள் மேம்பாட்டு இயக்க செயலாளர் ஆக்னஸ் தலைமை வகித்து, இயற்கை விவசாயம் குறித்து பேசினார். முன்னோடி விவசாயிகள் மனோகரன், நாகராஜன், ஆனந்த் முன்னிலை வகித்தனர். திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி மாணவி கனகவள்ளி வரவேற்று, இயற்கை விவசாயம் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார். கல்லூரி மாணவிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், விவசாயிகள் பங்கேற்றனர்.

**திருச்சியில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.10 உணவு விலை குறைக்க மக்கள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,00:12 IST

திருச்சி: திருச்சியில் பெரிய வெங்காயத்தின் (பெல்லாரி) விலை கிலோ 10 ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்துள்ளதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த சில மாதமாக நாட்டை உலுக்கிய ஸ்பெக்ட்ரம், விலைவாசி உயர்வு, பெட்ரோல், டீஸல் விலை உயர்வு பிரச்னைகளில் திடீரென இடம்பிடித்து, அதில் முதலிடத்தை பிடிக்கும் அளவுக்கு சென்றது பெரிய வெங்காயத்தின்

விலையேற்றம். சராசரியாக கிலோ எட்டு முதல் அதிகபட்சம் 20 ரூபாய் வரை விற்று வந்த பெரிய வெங்காயம் 40 ரூபாய், 60 ரூபாய் என உயர்ந்து ஒரு கட்டத்தில் 100 ரூபாயையும் தாண்டியது. வீட்டில் சமையலறையில் பிரதான தேவையான வெங்காயத்தின் விலையேற்றம் இல்லத்தரசிகளை வெகுவாக பாதித்தது. ஹோட்டல்களில் ஆம்லெட் உள்ளிட்ட உணவுப் பண்டங்களின் விலை தாறுமாறாக உயர்த்தப்பட்டது.

வெங்காயத்தின் விலையேற்றம் சாமானிய மக்கள் கண்களில் நீரை வடியவைத்தது. எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் தமிழகம் போன்ற மாநிலங்களில், ஒரு லிட்டர் பெட்ரோல், ஒரு பீர், ஒரு கிலோ வெங்காயம் ஆகியவை ஒரே விலை விற்கிறது என விமர்சிக்கத் துவங்கினர். இந்த விலையேற்றம் மத்திய அரசுக்கும் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது. விலையேற்றத் தை குறைக்க அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. எதுவும் உடனடி பலனைத் தரவில் லை.

படிப்படியாக குறையத் துவங்கியது பெரிய வெங்காயத்தின் விலை. திருச்சி தென்னூர் மற்றும் கே.கே.நகர் உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ முதல் தர பெரிய வெங்காயத்தின் விலை 13 ரூபாய்க்கும், அதறகடுத்த தரத்தில் உள்ளவை 10 ரூப ாய்க்கும் விற்கப்பட்டது. கடந்த சில நாட்களாவே இந்த விலை இறக்கத்துடன் காணப்படுகிறது. 100 ரூபாயை தாண்டி விற்ற பெரிய வெங்காயத்தின் விலை இன்று வழக்கமான விலைக்கு வந்துள்ளது மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை சின்ன வெங்காயத்தின் விலை கிலோ 26 முதல் 30 ரூபாய் விற்கப்படுகிறது. இதன் விலை இன்னமும் பழைய நிலைக்கு வராதது மக்களுக்கு சற்று ஏமாற்றத்தை அளிக்கிறது. பெரிய வெங்காயத்தின் விலையேற்றமடையும் போது, ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை வெகுவாக உயர்த்தப்பட்டது.

ஆனால், தற்போது வெங்காயத்தின் விலை இறங்கியும் ஹோட்டல்களில் இன்னமும் உயர்த்தப்பட்ட விலையே நீடிப்பது மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, ஹோட்டல் உரிமையாளர் உணவுப்பண்டம் விலையை குறைக் க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. இதேபோல், திருச்சியில் நேற்று முக்கிய காய்கறிகளான அவரை 14 ரூ, கத்திரி 16 ரூ, வெ ண்டை 10 ரூ, தக்காளி 6 முதல் 8ரூபாய்க்கும், இங்கிலீஸ் காய்கறிகளான கேரட் 16ரூ, பீட்ரூட் மற்றும் சவ்சவ் 8ரூ, முள்ளங்கி 6ரூபாய்க்கு விற்கப்பட்டது.

**காளான் தொழில் துவங்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,02:20 IST

மதுரை:மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி உயிர் தொழில்நுட்பபிரிவு சார்பில், நாளை காளான் தொழில் தொடங்குவது குறித்த ஒருநாள் கருத்தரங்கு நடக்கிறது.
விருப்பமுள்ளவர்கள் முன்பதிவு செய்துகொள்ள 97881 71632ஐ தொடர்பு கொள்ளலாம் என, கல்லூரி முதல்வர் கண்ணன் தெரிவித்துள்ளார்.

**தர்பூசணியின் விற்பனை அமோகம் வரத்து குறைவால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,00:46 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு தர்பூசணியின் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. வழக்கத்தைவிட இந்தாண்டு முன்கூட்டியே கோடைவெயில் சுட்டெரிக்கத் தொடங்கிவிட்டது. கடுமையான வெப்பம் காரணமாக அம்மை நோய் வேகமாக பரவி வருகிறது. கோடை வெயிலில் இருந்து தங்களை தற்காத்து கொள்வதற்காக பொதுமக்கள் பல்வேறு யுக்திகளை கையாண்டு வருகின்றனர். உடலுக்கு குளிர்ச்சியை அளிக்க கூடிய இளநீர், மோர், கம்மங்கூழ், வெள்ளரிக்காய் போன்றவற்றை மக்கள் அதிக அளவில் உபயோகப்படுத்தி வருகின்றனர்.
மேலும் கூல்டிரிங்ஸ், பழரசம், பழஜீஸ், சர்பத் போன்றவற்றின் விற்பனையும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. கோடை வெயில் காலத்தில் மட்டும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படக்கூடிய தர்பூசணி தூத்துக்குடி மார்க்கெட்டிற்கு தற்போது அதிக அளவில் வரத் தொடங்கியுள்ளது.

இனிப்பு சுவையுடன், அதிக நீர்சத்தினையும் கொண்ட தர்பூசணியை உட்கொள்வதன் மூலம் கோடை வெப்பத்தில் இருந்து உடல் சூட்டினை தணிக்க முடியும் என்பதால் இந்த பழத்தினை பொதுமக்கள் அதிக அளவில் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தேனி, விருதுநகர், மதுரை போன்ற அண்டை மாவட்டங்களில் இருந்து தூத்துக்குடிக்கு தர்பூசணி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. தர்பூசணியின் வரத்து தற்போது குறைவாக உள்ளதால் கிலோ ஒன்று 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வரும் நாட்களில் தர்பூசணியின் வரத்து அதிகரிக்கும் என்றும் அதன் பின்னர் விலை குறையும் என்றும் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**ஆப்பிள் தக்காளி சாகுபடி**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,23:38 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் ஆப்பிள் தக்காளி சாகுபடி செய்ய, விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். நான்கு மாத பயிரான சாதாரண தக்காளி ஒரு மாதத்துக்கு மட்டுமே காய்க்கும் இயல்புடையது. ஆனால், ஆறு மாதப்பயிரான ஆப்பிள் தக்காளி, இரண்டு போகம் காய்க்கும் இயல்புடையது. இதனால், ஆப்பிள் தக்காளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சாதாரண தக்காளியை விட, இதற்கு விலை அதிகம் கிடைப்பதுடன், விரைவில் கெட்டுப்போவதில்லை. மார்க்கெட்டில் எப்போதும் கூடுதல் விலை கிடைக்கிறது.

கொடுவாய், மஞ்சப்பூர், கள்ளிமேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வகை தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. செடிகளை சணல் கயிற்றால் கட்டி, சுற்றிலும் நடப்பட்டுள்ள மரங்களில் தொங்க விடும் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதனால், காய்கள் நிலத்தில் உள்ள ஈரப்பதத்தால், அழுகி வீணாகாமல் பாதுகாக்கப்படுகிறது.

சடிகள் கட்டப்பட்டுள்ள காட்சி சிலந்தி வலை பின்னியது போல் காணப்படுகிறது. மரம், கயிறு, கம்பி என ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இதனால், சிறிய விவசாயிகள் ஆப்பிள் தக்காளி சாகுபடி செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது.இது, ஆண்டுக்கு இரண்டு போகம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி மழையால் சேதம் அடைந்து விட்டது. மார்கழி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி, தற்போது காய்க்க ஆரம்பித்துள்ளது. வெயில் காலம் ஆரம்பித்துள்ளதால், வரும் நாட்களில் சாதாரண தக்காளி விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படும்.

ஆப்பிள் ரகம் வெயில் காலத்தில் மார்க்கெட்டுக்கு வர இருப்பதால், நல்ல விலை கிடைக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஐந்தரை கிலோ கொண்ட ஒரு கூடை நாட்டு தக்காளி 25 ரூபாய்க்கும், ஆப்பிள் தக்காளி 40 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

**வேளாண் வணிகத்துறை ஆணையர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,00:43 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை வேளாண் வணிகத்துறை ஆணையர் ஆய்வு செய்தார். விருத்தாசலம் கடலூர் ரோட்டில் உள்ள வேளாண் ஒழுங்குமுறை

விற்பனைக் கூடத்தை வேளாண் வணிகத்துறை ஆணையர் விவேகானந்தன் ஆய்வு செய்து விற்பனை கூடத்தில் நடந்து வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார். கிடங்கு மற்றும் பரிவர்த்தன கூடங்களை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை செய்து தர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அவரிடம் விற்பனைக் கூட வர்த்தகர் நலச் சங்கத்தினர் ஜெனரேட்டர் வசதி, நெல்லுக்காக தனி களம், குடோன் வசதி, மின் விளக்கு வசதி உள்ளிட்ட வசதிகள் செய்துதர வேண்டும் என மனு கொடுத்தனர். விற்பனைக் குழுச் செயலர் அருள்பிரகாசம், கண்காணிப்பாளர் ஆறுமுகம், மேற்பார்வையாளர் ராதாகிருஷ்ணன் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு ஓய்வூதியம்: சங்கக்கூட்டத்தில் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,23:35 IST

கோவை : "விவசாயிகளுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டும்' என,தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் பெருந்துறை ரோட்டிலுள்ள மாநில தலைமை அலுவலகத்தில் நடந்தது. மாநில தலைவர் ரத்தினசாமி தலைமை வகித்தார்.

மாநில பொதுச் செயலாளர் வரதராஜன், பொருளாளர் நஞ்சுக்குட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகள்:மொழிப்போர் தியாகிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் போல், விவசாய போராட்டங்களில் நடந்த துப்பாக்கி சூடுகளில் உயிரிழந்த குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் வழங்குவதுடன், குடும்பங்களில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.60வயது நிரம்பிய விவசாயிகள், கிராமப்புற மக்கள் பொருளாதார ரீதியாக பாதிப்புக்கு ஆளாகாமல் மாதம் தோறும் ஓய்வூதியம் அளிக்க வேண்டும்.

கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களோடு தொடர்புடைய ஆற்று நீர் உரிமைகள் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுப்பணைகள், பாசனக் கால்வாய் திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும். எவ்வித ஜாமீனின்றி மானியத்துடன் கூடிய வட்டியில்லா பயிர் கடன் ரூ.3 லட்சம் வரை வழங்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளில் விவசாயத்துக்கும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கும் வழங்கப்பட்ட கடன் தொகைகளும், வட்டிகளும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

பகலில் 12 மணி நேர மின்சாரம் இடைநிறுத்தம் இல்லாமல் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். அனைத்து காய்கறிகளும் ஆண்டு முழுவதும் கிலோ ரூ.20 ஆக ஆதார விலை அறிவித்து, அரசு கொள்முதல் செய்ய வேண்டும். வன விலங்குகளால் உயிரிழக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபாய் நஷ்ட தொகையை ரூ.3 லட்சமாக உயர்த்த வேண்டும். மேலும், அவற்றால் சேதப்படுத்தப்படும் பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈடு தர வேண்டும். வேளாண் பட்ஜெட் தயாரிப்பதற்கு முன் விவசாயிகள் சங்க பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயத்தில் நேரடியாக பன்னாட்டு நிறுவனங்கள் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது; அனைத்து சலுகைகளுடன் விவசாயிகளின் கூட்டுப்பண்ணை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும். தோல் மற்றும் சாயக்கழிவுகளால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.நிலம் கையகப்படுத்தப்பட்ட விவசாயக் குடும்பங்களில் தகுதியுள்ள ஒருவருக்கு அரசு வேலை தர வேண்டும். ஈரோடு மாவட்டம் தாளவாடியில் இயற்கை வேளாண் பல்கலை அமைக்க வேண்டும். அனைத்து விவசாய உற்பத்தி பொருட்களையும் ஏற்றுமதி செய்ய ஊக்கமளிக்க வேண்டும்.

உள்நாட்டில் விளையும் விவசாய உற்பத்தி பொருட்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வது முற்றிலும் தடை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. மாநில செயலாளர் ராஜமாணிக்கம், மாநில கொள்கை பரப்பு செயலாளர் வாசுதேவன் மற்றும் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சீசன் துவங்கியும் வரத்து இல்லை: கொப்பரை சூடு பிடித்தது**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,03:36 IST

பொள்ளாச்சி:தேங்காய் சீசன் துவங்கியுள்ள நிலையில், போதிய வரத்து இல்லாததால், கொப்பரை மார்க்கெட் சூடுபிடித்துள்ளது. கடந்த 5ம் தேதி நிலவரப்படி, காங்கேயம் மார்க்கெட்டில், கொப்பரை கிலோவுக்கு 52 ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 85 ரூபாய், தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,150 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 14 ஆயிரத்து 500, சென்னைக்கு உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 12 ஆயிரம் ரூபாய் விலை வழங்கப்பட்டது.

தோட்டத்தில், விவசாயிகள் பறித்து வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 7.50 ரூபாய், வியாபாரிகள், சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள, தேங்காய் ஒன்றுக்கு, 7 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 58- 60 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,310, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 87 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது.

விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 16 ஆயிரம் முதல் 16 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலை கிடைத்தது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:கடந்த வாரம், கொப்பரை கிலோவுக்கு 18 ரூபாய், தேங்காய் பவுடர், கிலோவுக்கு 30, தேங்காய் எண்ணெய், டின்னுக்கு 380 ரூபாய் விலை குறைந்தது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 8 ரூபாய், தேங்காய் பவுடர், கிலோவுக்கு 2, தேங்காய் எண்ணெய், டின்னுக்கு 160 ரூபாய் விலை உயர்ந்துள்ளது. தற்போது, தேங்காய் சிரட்டை, டன்னுக்கு 5,900 ரூபாய் விலை கிடைக்கிறது. ஒரு தேங்காய்க்கு 70 பைசா வரை கூடுதல் விலை கிடைக்கும். தேங்காய் மட்டைக்கு (ஆயிரம்), ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கிறது. தேங்காய் சிரட்டை, தேங்காய் மட்டை மூலம் கிடைக்கும் வருவாயை பொறுத்து, விவசாயிகளுக்கு விலை வழங்கினால், சீசன் காலத்திலும் பாதிப்பு இருக்காது. இவ்வாறு, சங்க நிர்வாகிகள் கூறினர்.

**கடல் பகுதியில்தான் புவி வெப்பமடைந்துள்ளது**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,01:43 IST

சங்கரன்கோவில் : தொழில் புரட்சியின் காரணமாக கடல் பகுதியில் தான் புவி வெப்பமடைந்துள்ளது நகர் பகுதியில் புவி வெப்பமடையவில்லை என்று சங்கரன்கோவிலுக்கு வந்த சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் தெரிவித்தார். சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோயிலுக்கு சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் சுவாமி தரிசனம் செய்வதற்காக வந்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் பேசும் போது, இந்திய பெருங்கடல் பகுதியில் நில அதிர்வுகள் ஏற்பட்டால் ஐதராபாத்தில் உள்ள தேசிய கடல்சார் தகவல் சேவை மையம் இணையதளம் மூலம் தகவல்களை வெளியிடும். அதனை மத்திய அரசு முறைப்படி அறிவிக்கும். நில அதிர்வு குறித்து முன்னறிவிப்பு செய்ய வாய்ப்பு இல்லை.

நில அதிர்வு ஏற்பட்ட 20 நிமிடங்களில் அதிர்வு ஏற்பட்டுள்ளதை தெரிவித்து விடுவார்கள். இதன் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக உதவிகள் போய் சேரலாம். இதற்கான வசதிகள் இந்தியாவில் இருக்கிறது. மென்பொருள் மூலம் எதிர்காலத்தில் நில அதிர்வு குறித்த எச்சரிக்கை செய்ய வாய்ப்பு இருக்கிறது. நில அதிர்வு 6.5 சதவீதத்திற்கு மேல் இருந்தால் ஆழிப்பேரலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஜப்பானில் நிலப் பகுதிக்கு அருகில் கடலில் நில அதிர்வு ஏற்பட்டதால் தான் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது.

ஆழிப்பேரலையை பொறுத்தவரையில் எந்த இடத்தில், எவ்வளவு ஆழத்தில் நடந்தது என்பது முக்கியம். நில அதிர்விற்கும் வானிலை ஆராய்ச்சிக்கும் தொடர்பு இல்லை. வானிலை ஆராய்ச்சி என்பது வளிமண்டலம் தொடர்புடையது. நில அதிர்வு என்பது புவியியல் தொடர்புடையது. உலகில் தொழில் புரட்சி காரணமாக கார்பன்டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ராஸ் ஆக்சைடு ஆகிய மூன்று வாயுக்களின் சதவீதம் அதிகரித்தால் தான் பூமி வெப்பமடைகிறது. கடல் பகுதியில் தான் புவி வெப்பமடைந்துள்ளது, நகர் பகுதியில் ஆகவில்லை. வெயில் அதிகமாக இருப்பதற்கும், பனி அதிகமாக இருப்பதற்கும் ஆழிப்பேரலையால் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணம் என்று கூற முடியாது. இதற்கு முன்பும் ஆழிப்பேரலை ஏற்பட்டு இருக்கிறது.

அதனால் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறதா என்று கூற முடியாது. வானிலை தொடர்பாக 100 வருட தகவல்களை வைத்துக் கொண்டு தான் உறுதியாக கூற முடியும். டில்லியில் உள்ள வானிலை தலைமை ஆய்வு மையம் தென் மேற்கு பருவமழை குறித்து ஏப்ரல் 15ம் தேதி தகவல் வெளியிடும். இவ்வாறு ரமணன் கூறினார். உடன் சங்கரன்கோவில் தாசில்தார் சந்திரசேகரன் இருந்தார்.

**விவசாயத்தை பாதுகாக்க பிரசார இயக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,01:42 IST

எட்டயபுரம் : தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எட்டயபுரம் தாலுகா குழு விவசாயத்தை பாதுகாக்க மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி பிரசார இயக்கம் நடந்தது. நதிகள் இணைப்பு, மின்தட்டுப்பாடு, கட்டுபடியாகாத விலை மற்றும் பல்வேறு பிரச்னைகளை வலியுறுத்தி தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பிரசார இயக்கம் நடந்தது. மாவட்ட செயலாளர் நல்லையா எட்டயபுரத்தில் துவக்கி வைத்தார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்ட தலைவர் கஸ்தூரி இளைஞர் பெருமன்றம் மாநில துணை செயலாளர் பாலமுருகன், சி.பி.ஐ., நகர செயலாளர் குமரன், முன்னாள் கவுன்சிலர் காளிகண்ணையா மற்றும் பலர் பேசினர். எட்டயபுரம் மேலஈரால், கீழ ஈரால், வாலம்பட்டி, சண்முகபுரம், செமபுதூர், அஞ்சுரான் பட்டி, ஈராச்சி கசவன்குன்று, சுரைக்காய்பட்டி, குளத்துள் வாய்ப்பட்டி, குமாரகிரி, இளம்புனம், வங்கார்பட்டி, சின்ன மலைக்குன்று ஆகிய கிராமங்களில் பிரசாரம் செய்தனர். மாநில குழு உறுப்பினர் இளசை மணியன், மாவட்ட குழு உறுப்பினர் ராமசுப்பு, தாலுகா தலைவர் ரெங்கசாமி, உதவிசெயலாளர் குருசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கொள்முதல் விலை சரிவதால் பெல்லாரி விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 13,2011,23:46 IST

பல்லடம் : பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் 2,000 ஏக்கரில் பெல்லாரி சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளிடம், ஒரு கிலோ பெல்லாரியை கடந்த வாரம் ரூ.14க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.சில நாட்களாக, கர்நாடகா, நெல்லை மாவட்டம் தென்காசி, பாவூர்சத்திரம், சுரண்டை, கடையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் மிக அதிக அளவில் பெல்லாரி, திருப்பூர், கோவை பகுதி மார்க்கெட்டில் குவியத்துவங்கியுள்ளன. இதன் எதிரொலியாக, பெல்லாரி கொள்முதல் விலை, கிலோவுக்கு ஐந்து ரூபாய் குறைந்துள்ளது.விலை சரிவு, விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது.

வெளியிடங்களில் இருந்து பெல்லாரி வரத்து குறைந்தால், கூடுதல் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பட்டறை போட்டு பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.விவசாயிகள் கூறுகையில், "ஒரு ஏக்கர் பெல்லாரி சாகுபடி செய்து அறுவடை வரை ரூ.40 ஆயிரம் வரை செலவாகும். ஒரு கிலோ பெல்லாரி குறைந்தபட்சம் கொள்முதல் விலையாக ரூ.15 கிடைக்க வேண்டும். அப்போது தான் பெல்லாரி விவசாயம் கட்டுப்படியாகும்,' என்றனர்.

தினத் தந்தி

# நடப்பு நிதி ஆண்டில் வங்கிகளின் வேளாண் கடன் ரூ.3.75 லட்சம் கோடியை தாண்டும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டில் வங்கிகள் வழங்கும் விவசாய கடன் ரூ.3.75 லட்சம் கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிசம்பர் மாதத்திலேயே வேளாண் கடன் ரூ.3 லட்சம் கோடியை எட்டி விட்டதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

சென்ற நிதி ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.3.25 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதை விஞ்சி ரூ.3.91 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டது. அவ்வாண்டில் குறுகிய கால பயிர்க் கடன்கள் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதாக தெரிகிறது.

கடந்த சில ஆண்டுகளாக, மத்திய அரசு நிர்ணயித்த அளவில் வேளாண் கடன் இலக்குகளை வங்கிகள் வெற்றிகரமாக அடைந்து வருகின்றன. எதிர்வரும் 2011–12–ஆம் நிதி ஆண்டில் ரூ.4.75 லட்சம் கோடிக்கு வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## *குன்னூர் ஏல மையத்தில் 27 சதவீத தேயிலை தூள் தேக்கம்*

*குன்னூர், மார்ச்.14–*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 27 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது.*

*ஏலம்*

*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் தேயிலை ஏலத்தை நடத்தி வருகின்றனர். இந்த ஏலத்தில் ஏல மையத்தில் உறுப்பினர்களாக உள்ள உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் கலந்து கொள்கின்றனர்.*

*விற்பனை எண் 10–க்கான ஏலம் கடந்த 10, 11 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 19 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.*

*தேக்கம்*

*இதில் 7 லட்சத்து 78 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 41 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*ஏலத்தில் ஏற்றுமதியாளர் களின் பங்களிப்பு குறைவாகவே இருந்தது. உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் ஏலத்தில் மந்த நிலை நிலவியது. இதன் காரணமாக தேயிலை தூளுக்கு 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.*

*ஆர்தோடக்ஸ்*

*27 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை யாக 156 ரூபாய் இருந்தது. 75 தொழிற்சாலைகள் தங்களது சி.டி.சி. ரக தேயிலை தூளை 100 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்தனர்.*

*ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 195 ரூபாய் என்பது இருந்தது. 30 தொழிற்சாலைகள் தங்களது ஆர்தோடக்ஸ் தேயிலை தூளை 100 ரூபாய்க்கு விற்பனை செய்தனர். சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 44 ரூபாயில் இருந்து 56 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகம்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 57 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 135 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விற்பனை எண் 11–க்கான ஏலம் வருகிற 17, 18 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 57 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

## வட ஆப்பிரிக்க நாடுகளில் போராட்டம்: இந்திய தேயிலை தூள் ஏற்றுமதி பாதிப்பு

*குன்னூர், மார்ச்.14–*
*வட ஆப்பிரிக்க நாடு களில் பொதுமக்கள் போராட்டத்தால் இந்திய தேயிலை தூள் ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்து உள்ளதாக கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.*
*கருத்தரங்கு*
*மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தால் ஏற்பட்டுள்ள இந்திய தேயிலையின் நிலை குறித்த கருத்தரங்கு குன்னூரில் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு கோத்தாரி வேளாண்மை மைய இயக்குனர் அய்யங்கார் தலைமை தாங்கினார்.*
*கருத்தரங்கில் சர்வதேவ வேளாண்மையியல் ஆலோசகர் பி.எஸ்.சுந்தர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:–*
*25 சதவீதம்*
*மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்க நாடுகளான எகிப்து, துனிசியா, ஏமன், லிபியா, பக்ரைன், ஜோர்டான், சிரியா, மொராக்கோ, அல்ஜீரியா, ஓமன் போன்ற நாடுகளில் உள்நாட்டு கலவரம் ஏற்பட்டு உள்ளது.*
*இந்திய தேயிலை ஏற்று மதிக்கு இந்த நாடுகள் பெரும் பங்காற்றி வந்தன. மொத்த ஏற்றுமதியில் 25 சதவீதம் இந்த நாடுகளுக்கு ஏற்றுமதியா கிறது. கடந்த 2010–ம் ஆண்டு 5 கோடி கிலோ தேயிலை இந்த நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகி உள்ளது. இதன் மதிப்பு சுமார் 650 கோடி ரூபாய் ஆகும்.*
*மேற்கண்ட நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள கலவரம் காரணமாக மொத்த தேயிலை ஏற்றுமதியில் 20 சதவீதம் பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் நேரடி பாதிப்பு குன்னூர் தேயிலை ஏல மையத்திலும் ஏற்பட்டு தேயிலை தூள் தேக்கம் அடைந்து வருகிறது.*
*25 சதவீதம்*
*இதனால் விலை வீழ்ச்சியை யும் தேயிலை தூள் கண்டு வருகிறது. இந்த ஆண்டின் தொடக்கம் முதலே ஏற்று மதியாளர்களின் பங்களிப்பு குறைவாக இருந்து வருகிறது. மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்க நாடுகளில் இந்திய தேயிலையை அதிகளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்பதற்காக எகிப்து தலைநகரான கெய்ரோவில்*

சர்வதேச தேயிலை விற்பனை மையம் தொடங்கப்பட் டது.

தேயிலை வாரியம் மூலம் கடந்த 2010–ம் ஆண்டில் இந்த மையம் தொடங்கப்பட்டது. இந்த மையத்தில் இருந்து தான் தேயிலை மேற்கண்ட நாடு களுக்கு கொண்டு செல்லப் பட்டது. இந்த நாடுகளில் குழப்பம் ஏற்பட்டு உள்ளது இந்தியாவிற்கு அதிர்ச்சி அளித்துள்ளது.

மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்கா நாடுகளில் இருந்து தேயிலைக்காக ரஷ்யா நாட்டு பக்கம் திரும்பும் போது ரஷ்யாவும் தேயிலையை வாங்க மறுக்கிறது. தற்போது ரஷ்யாவில் உறைபனி நிலவுவ தால், அவர்களும் தேயிலையை இறக்குமதி செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

பாகிஸ்தான் நாடு நமக்கு உகந்த தேயிலை இறக்குமதி நாடாக இல்லை. எனவே இந்திய தேயிலை ஏற்றுமதி தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு அவர் பேசினார்.



கூடலூர் பகுதியில் அறுவடை செய்த பச்சை குறுமிளகுகள் விவசாயி ஒருவரது வீட்டின் முன் வெயிலில் காய வைக்கப்பட்டுள்ள காட்சி.

# நல்ல விலை கிடைப்பதால் குறுமிளகு விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர், மார்ச்.14-

நல்ல விலை கிடைத்து வருவதால் குறுமிளகு விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் குறுமிளகுகளை அறுவடை செய்யும் பணி கூடலூர் பகுதியில் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

## குறுமிளகு விளைச்சல் அமோகம்

கூடலூர் பகுதியில் தேயிலைக்கு அடுத்தபடியாக காபி, குறுமிளகு, ஏலக்காய், இஞ்சி, கிராம்பு என பணப்பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன. தற்போது தேயிலைக்கு நல்ல விலை கிடைக்காததால் இதர பயிர்கள் மீது விவசாயிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். காபி பயிர் அறுவடை தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது.

கடந்த ஜூன் மாதம் குறுமிளகு பயிர்கள் காய்க்க தொடங்கின. சுமார் 6 மாத காலத்துக்கு பிறகு நல்ல விளைச்சல் காணப்பட்டது. அதற்கேற்ப சீரான மழை பெய்து வந்ததால் கூடலூர் பகுதியில் குறுமிளகு விளைச்சல் நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தின. இருப்பினும் நல்ல விலை கிடைக்குமா? என விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர்.

## மகிழ்ச்சி

கடந்த ஆண்டு கிலோவுக்கு ரூ.115 முதல் 130 வரை விலை போனது.மேலும் கடந்த ஆண்டு விளைச்சலும் குறைவாகவே இருந்தது. போதிய விலை கிடைக்காமல் குறுமிளகு விவசாயிகள் சிரமம் அடைந்தனர். தற்போது கிலோவுக்கு ரூ.215 வரை விலை கிடைக்கின்றன. இதனால் குறுமிளகு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தற்போது குறுமிளகு அறுவடை சீசன் என்பதால் நல்ல விலை கிடைக்கும் போது தங்களது விளை பொருட்களை விற்பனை செய்வதில் விவசாயிகள் அதிக அக்கறை செலுத்தியுள்ளனர். இதனால் குறுமிளகு செடிகளில் உள்ள பயிர்களை அறுவடை செய்யும் பணியில் மிக தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் கூடலூர் விவசாயிகள்.